**செ.வெ.எண்: 193** **நாள்: 28.03.2025**

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

**2025-2026 ஆம் ஆண்டிற்கான சிறப்பு நிலை விளையாட்டு மையம் (Centre of Excellece - CoE) மாணவ, மாணவியர் சேர்க்கை.** கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப அறிவியல் பூர்வமான விளையாட்டு பயிற்சி தங்கும் இட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் ஆறு இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

இச்சிறப்பு நிலை விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான விண்ணப்ப படிவம் 21.03.2025 முதல் www.sdat.tn.gov.in எனும் இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. சிறப்பு நிலை விளையாட்டு விடுதியில் சேர விருப்பம் உள்ளவர்கள் ஆன்லைனில் மூலம் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் விண்ணப்பித்தினை பூர்த்தி செய்து பதிவேற்றம் செய்வதற்கான கடைசி நாள் 06.04.2025 அன்று மாலை 5.00 மணி ஆகும். தேர்வுக்கு ஆன்லைன் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் தகவல்களுக்கு ஆடுகளத் தகவல் தொடர்பு மைய அலைபேசியினை 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விபரத்தினை பெற்றுக்கொள்ளலாம். சிறப்பு நிலை விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ மாணவியருக்கான மாநில அளவிலான தேர்வு போட்டிகள் வருகின்ற 08.04.2025 அன்று காலை 7.00 மணியளவில் கீழ்காணும் விவரப்படி நடைபெற இருப்பதால் ஆன்லைனில் விண்ணப்பித்தவர்கள் மட்டுமே தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதற்கான தகவல்கள் குறுஞ்செய்தி வாட்ஸ்ஆப் மூலமாக உரியவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

கூடைப்பந்து மாணவியர், கால்பந்து மாணவியர், குத்துச்சண்டை மாணவ மாணவியர், ரக்பி மாணவியர் மற்றும் கைப்பந்து மாணவ மாணவியர், தடகளம் மாணவ மாணவியர், ஜூடோ மாணவ மாணவியர், வால் விளையாட்டு மாணவ மாணவியர், கையுந்துப்பந்து மாணவ மாணவியர், கால்பந்து மாணவர்கள், பளுதூக்குதல் மாணவ மாணவியர், ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் பெரியமேடு சென்னையிலும், ஹாக்கி மாணவ மாணவியர் எம்.ஆர்.கே அரங்கம் சென்னையிலும், கபடி மாணவ மாணவியர் நேரு பார்க் சென்னையிலும் 08.04.2025 காலை 7.00 மணிக்கும் நடைபெறவுள்ளது.

**விளையாட்டுத் தகுதிகள்,** 01.01.2025 அன்று 17 (பதினேழு) வயது நிரம்பிய பன்னிரண்டாம் 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற கல்லூரிகளில் இளநிலை முதலாமாண்டு சேர்க்கை மற்றும் முதுகலை முதலாம் ஆண்டு சேர்க்கை சேர விரும்பும் மாணவ மாணவியர் தகுதியுடையவர் ஆவர்.

தனிநபர் மற்றும் குழு விளையாட்டு போட்டிகளில் விண்ணப்பிபவர்கள் மாநில அளவில் குடியரசு பாரதியார் தின விளையாட்டு போட்டிகள் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தமிழ்நாடு அணையில் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் தேசிய விளையாட்டு சம்மேளனங்கள், இந்திய பள்ளி விளையாட்டு கூட்டமைப்பு(SGFI) இந்திய விளையாட்டு அமைச்சகம் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் பன்னாட்டு அளவில் அங்கீகாரம் பெற்ற போட்டிகளை கலந்து கொண்டு பதக்கங்கள் பெற்றவர்களும் மாநில அளவில் முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் பதக்கம் பெற்றவர்களும் விண்ணப்பிக்க தகுதியானவர்கள் ஆவார்கள்.

எனவே, 2025-2026 ஆம் ஆண்டிற்கு சிறப்பு நிலை விளையாட்டு விடுதியில் சேருவதற்கு, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மாணவ, மாணவியர்கள் இணைதளம் மூலம் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai